மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: 23-7-70 நாளன்று நடைபெற்ற தொழிலாளர் நிலைக்குழுவின் கடைசிக் கூட்டத்தில் விவாதிக்கப்படுவதற்காக இந்த அறிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது. அக்கூட்டத்தில் திரைப்படத்தொழில் பணியாளர் களுக்காக சட்டமியற்றுவது குறித்து முத்தரப்பு குழுவின் அறிக்கையில் அடங்கியிருந்த செயற்குறிப்புகள் ஏற்பளிக்கப் பட்டன. இச்சட்டத்திற்கு இறுதி உரு கொடுக்கப்பட்டு வருவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு சட்டம் இயற்று வதற்கு முன்பாக நேற்று நிறைவேற்றிருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அந்தச் சட்டம் இருக்கிறதே அந்தச் சட்டமாவது பிலிம் ஸ்டுடியோக்களில் பணியாற்றக்கூடிய வர்களுக்கு அமலாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்போது ஷாப் ஆக்ட் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது பரிசீலிக்கப்படும். இப்போதும் அவர்களுக்கு ஷாப் ஆக்ட்படி தக்க பாதுகாப்பு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன்: சினிமா உலகம் என்பது அது ஒரு தனி உலகமாகக் கருதக்கூடிய அளவிற்கு அது ஒரு பெரிய தொழிலாக இன்றைய தினம் நடந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கும் இந்தச் சட்டங்கள் அவசியமாக வேண்டும் என்பதால் மத்திய அரசிடம் நம் அரசு இது பற்றிக் கடுமையாக வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பலமுறை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக விரைவில் சட்டம் ஒன்று கொண்டுவருவதற்கு மத்திய அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

சட்டமன்ற அச்சுப் பணிகள்

*278 வினா.—**திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சட்டப்பேரவைக்கெனத் தனியாக அச்சகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1972 ஆகஸ்ட் 23] ,

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : சட்டமன்ற அச்சுப் பணியைக் கவனிப்பதற்கென்று தனி அச்சகம் ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : சட்டசபைக்கான தனி அச்சகம் அமைக்க முடியாத நிலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இப்போது அண்மையில் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கின்றன, அந்த விதத்தில் அமைச்சர் அவர்கள் பாராட்டை பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அது மாதிரி இங்கே நிறைவேற்றப்படுகிற சட்டங்களும், சட்டத்திருத்தங்களும் அந்தந்த வாரமே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களது யோசனையை பரிசீலனை செய்து ஆவன செய்ய அரசு முயற்சிக்கும்.

சத்துணவுத் திட்டம்

* 279 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் ரொட்டி பால் வழங்குவது சென்னை நகரில் எத்தனை இடங்களில் செயல்படுத்தப்படுகிறது ?

(இ) தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் எங்கெங்கு வழங்கப்படுகிறது ?

(உ) தமிழகத்தின் எல்லா நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை செயல்படுத்தவேண்டி மத்திய அரசினை நமது அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) மத்திய அரசின் சிறப்புச்சத்துணவுத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் 319 உணவு வழங்கு நிலையங்கள் மூலம் மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சத்தூட்டப்பட்ட பால்ரொட்டி (Milk Bread) குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.